இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அப்பொழுது, அவர் தம் சீடரை வரவழைத்து, “இந்த ஏழைக் கைம்பெண், காணிக்கைப் பெட்டியில் காசு போட்ட மற்ற எல்லாரையும் விட மிகுதியாகப் போட்டிருக்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே, ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்” என்று அவர்களிடம் கூறினார் (மாற்கு 12:43-44)

# தேசிய ஒருமைப்பாடு குறித்து விவாதிக்க கிறிஸ்தவ பிரதிநிதிகள் மலேசிய பிரதமரை சந்தித்தனர்

கோலாலம்பூர்: மலேசிய பிரதமர் அன்வார் இப்ராகிம் நாடாளுமன்ற கட்டிடத்தில் கடந்த அக்டோபர் 29-ம் நாள், மலேசிய கிறிஸ்தவ கூட்டமைப்பின் (CFM) தலைவர் கோர் எபிஸ்கோபா பிலிப் தாமஸிடமிருந்தும் கூட்டமைப்பின் அங்கத்தினரிடமிருந்தும் மரியாதைக்குரிய வருகையை ஏற்றார்

மேலும் இச்சய்திப்பின் போது, பினாங்கின் கர்தினால் செபாஸ்டியன் பிரான்சிஸ், கூச்சிங்கின் பேராயர் சைமன் பீட்டர் போ ஹூன் செங், மற்றும் பிற கிறிஸ்த்தவ சபைகளின் தலைவர்கள் மத்தியில், அருள்பணி சேவியர் என்ரூ ஆகியோர் கலந்து கொண்டனர்.

மலேசயாவில் பல இனங்கள், மொழிகள் மற்றும் சமயங்கள் கொண்ட மக்க்ள் மத்தியில் தேசிய ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

ஒரு முகநூல் பதிவில், அன்வார், நாட்டில் உள்ள பல்வேறு மத சமூகங்களின் முன்னோக்குகளைப் பரிமாறிக்கொள்வதற்கும், அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கும் சந்திப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

கூட்டாட்சி அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சமயச் சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகளைக் கேட்பதற்கு இந்தக் கூட்டம் எனக்கு ஒரு குறிப்பிடத்தக்க தளமாக அமைகிறது” என்று பிரதமர் கூறினார்.

"பல்வேறு சமயங்களுக்கிடையில் நெருக்கமான ஒத்துழைப்பு நமது தேசத்தின் நல்லிணக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் முக்கியமானது என்று நான் நம்புகிறேன், மேலும் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளமான மலேசியாவிற்கு வழி வகுக்கிறது" என்று அவர் கூறினார் என்று பெர்னாமா செய்தி நிறுவனம் செய்தி வெளிட்டது என்பது குறிப்பிட்டத்தக்கது.

2020 மலேசிய அரசாங்கக் கணக்கெடுப் பின்படி, மக்கள் தொகையில் 9.1% அல்லது 2,941,049 பேர் கிறிஸ்தவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மலேசியாவின் மூன்றில் இரண்டு பங்கு கிறிஸ்தவர்கள் கிழக்கு மலேசியாவின் சபா மற்றும் சரவாக் மாநிலங்களில் வாழ்கின்றனர்.



*பிரதமர் அன்வாருடன் கிறிஸ்தவக் கூட்டமைப்பின் அங்கத்தினர்கள்*

இந்த முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்புகள் நாட்டிற்குள் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் பிணைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் அன்வார் நம்பிக்கை தெரிவித்தார்.

இன அடிப்படையில், 59.2% கிறிஸ்தவர்கள் பூமிபுத்ரா, 26.9% சீனர்கள், 4.4% இந்தியர்கள், 0.8% பிற இனத்தவர்கள், 8.6% மலேசியர்கள் அல்லாத குடிமக்கள்.

மேற்கண்ட சந்திப்பானது, பன்முகத்தன்மை கொண்ட மலேசியாவில் நல்லிணக்கம் இன்றியமையாதது என்பதை எடுத்துரைக்கும் நோக்கத்திற்கான பெரும் முயற்சியாகக் கருதப்படுகிறது.

## கூச்சிங் பேராயர் அவர்களுக்கு 'டத்தோ' பட்டம் வழங்கப்பட்டது



சரவாக் அரசாங்கம் Panglima Setia Bintang Sarawak **எனும்** விருதை கூச்சிங் பேராயர் சைமன் போவுக்கு வழங்கியுள்ளது, இது 'டத்தோ' என்ற பட்டத்தை கொண்டுள்ளது.

அக்டோபர் 11 அன்று சரவாக் மாநில ஆட்சியாளரான Tun Pehin Sri Dr Wan Junaidi Tuanku Jaafar அவர்களின் 78 வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது பேராயர் போ, மற்ற மாநில விருது பெற்றவர்களுடன் சேர்ந்து பட்டத்தைப் பெற்றார்.

# மலாக்கா மறைவட்ட குடும்ப தினக் கொண்டாட்டம் 2024

மலாக்காவில் உள்ள அனைத்து பங்குகளான குவாடலூப்பே, புனித பிரான்சிஸ் சவேரியார், தூய ஆவியானவர், புனித திரேசா, புனித பேதுரு மற்றும் புனித மரியா ஆகிய பங்குகளில் இருந்து ஏறக்குறைய 1400 பங்கு மக்கள் மேற்கண்ட குடும்ப தினத்திற்காக அழகாக அலங்கரிக்கப்பட்ட ‘செயின்ட் மேரிஸ்’ தேவாலயத்தின் வளாகத்தில் கடந்த 26 அக்டோபர் 2024 அன்று ஒன்று கூடினர். காலை 8.00 மணியளவில், மான்ஃபோர்ட் இளைஞர் மையத்தில் ஏற்பாடு செய்யப் பட்ட சிங்க நடன நிகழ்ச்சி மூலம் அனை வரும் வரவேற்கப்பட்டார்கள்.

இந்த மங்களகரமான நிகழ்வானது, புனித மரியா பங்கு மற்றும் புலாவ் கடோங் சிற்றாலயத்தின் இளைஞர்கள் தலைமையில் மகிழ்ச்சிமிகு இறை புகழ்ச்சி பாடல்ளைப் படைத்தனர். காலை 8.30 முதல் 10.00 மணி வரை மக்கள் மைதானத்திலும் மண்டபத்திலும் சில விளையாட்டுகளில் பங்கெடுப்பதற்கும் ஒருவர் ஒருவரோடு அளவளாவுவதற்கும் நேரம் ஒதுக்கப்பட்டது.

காலை 10.00 மணிக்கு நான்கு இடங்களில் நான்கு மொழிகளில் இறை புகழ்ச்சி ஆராதனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த வாயப்பானது, நன்றி தெரிவிக்கும் மற்றும் குடும்பங்களாக உறவை வலுப்படுத்தும் நேரமாகப் பயன்படுத்தப்பட்டது.

ஆலயத்தில் காலை 10.30 மணிக்கு நான்கு



மொழிகளில் செபமாலை ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து காலை 11.00 மணிக்கு திருக்குடும்ப தின வழிபாட்டைப் பயன்படுத்தித் திருப்பலி கொண்டாடப் பட்டது. ஆயர் பெர்னார்ட் போல் தலைமையேற்ற இத்திருப்பலியில் மலாக்கா மறைவட்டத்தைச் சேர்ந்த 10 அருள் பணியாளர்கள் உடனிருந்தனர். அடுத்து, ஆயர் பெர்னார்ட் போல் அவர்கள் திருமணம் செய்து 50 ஆண்டுகளுக்கு மேலான தம்பதிகளுக்கு ஆசீர் வழங்கினார். பின்னர் போர்த்துகீசியர் நடனம் உட்பட பல கலாச்சார நடனங்களும் அரங்கேற்றம் கண்டது. தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது.

பிறபகல் 2.30 மணியளவில் இந்த மலாக்கா மறைவட்ட குடும்ப தினக் கொண்டாட்டம் இனிதே முடிவுற்றது. இந்நிகழ்வை மிகச் சிறப்பாக ஏற்படாடு செய்த அருள்பணி அலேக்ஸ் அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# கோபேங்,புனித யூதா ததேயு பங்கின் 105-வது திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது

**கொபெங், பேராக்:** இங்குள்ள புனித யூதா ததேயு பங்கு அதன் 105வது பங்குத் திருவிழாவை அக்டோபர் 25 முதல் அக்டோபர் 28, 2024 வரை கொண் டாடியது, இதன் முக்கிய கருப்பொருள் "எதிர்நோக்குடன் ஒன்றித்துப் பயணிக்கும் திருப்பயணிகள்" என்பதாகும்.

பினாங்கு தீவைச் சேர்ந்த Msgr. ஜூட் மிராண்டா அக்டோபர் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் விழாத் திருப்பலிக்குத் தலைமை மறையுரையாற்றினார். அக்டோபர் 26 அன்று அவர் "இயேசு: எதிர்நோக்குடன் மனுவுருவானார்" என்ற கருப்பொருளுடன் மறையுரை பகர்ந்தார். அக்டோபர் 27, ஞாயிற்றுக்கிழமை, கொபேங் மற்றும் தொலைதூர பகுதிகளில் இருந்தும் ஏறக்குறைய 500 இறைமக்கள் தேவாலயத்தில் காலை 10 மணிக்கு ஒன்றுகூடினர். நவநாள், செபமாலை, திருப்பலி மற்றும் திருப்பவனி ஆகியவற்றில் ஆர்வத்துடன் பங்குப்பெற் றனர். "எதிர்நோக்கு நிறைந்த வாழ்க்கை வாழ்தல்" என்பதே அன்றையைக் கருப்பொருள்.

சிற்றாலயத்தின் நிர்வாகி, பத்து காஜாவில்



உள்ள புனித யோசேப்பு பங்கின் பங்குத்தந்தை மைக்கேல் தாஸ் மற்றும் புக்கிட் மெர்தாஜாமில் உள்ள அருள்பணி அந்தோணி பிள்ளை ஆகியோர் உடனி ருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. திருப்பலியில் திருத்தொண்டர் ரிச்சர்ட் வில்சன் உடனிருந்து உதவினார்.

Msgr ஜூட் மிராண்டா அவர்கள் தமது மறையுரையில், 'நீங்கள் மிகவும் பாதிக்கப்படும் போது உங்கள் வாழ்க் கையில் உங்கள் மிகத் தாழ்ந்த நிலையை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா?' ஒரு முறை அல்லது சிலமுறை, பலர் இதுபோன்ற அனுபவங்களை அனுபவித் துள்ளார்கள் என்றும், 'உங்கள் வாழ்க்கையின் மிகக் தாழ்ந்த நிலைக்கு வரும்போது நீங்கள் என்ன செய்வீர்கள். நீங்கள் இயேசுவைப் பார்த்து, உங்களுக்கு வாழ்வையும் எதிர்நோக்கையும் தரக்கூடியவரை அண்டு வீர்களா? என்ற கேள்வியை எழுப்பினார்.

'சில நேரங்களில் நம் வாழ்வில் இயேசு நம்முடன் உடனிருப்பதை மறந்து விடுகி றோம். பார்வையற்ற பர்த்திமேயு தனது தாழ்ந்த நிலையில் பிச்சையெடுத்தார், அவர் இயேசுவில் நம்பிக்கையையும் புதிய வாழ்க்கையையும் பெற முடியும் என்ற எதிர்நோக்கில் இயேசுவின் அருள்பெற முடியம் என்பதை அவர் அறிந்திருந்தார். Msgr ஜூட் நீங்கள் எந்த பிரச்சனையை எதிர்கொண்டாலும் இயேசுவிடம் செல்ல



வேண்டும் என்றார். அவர் உங்களை நிராகரிக்க மாட்டார். அவர் நம்மை மாற்றுவார், நம் இதயத்தைத் திறப்பார், நாம் இயேசுவைச் சந்தித்தால் நம் வாழ்க்கை மாறும். ஆனால் இயேசுவைத் தேடி பர்த்திமேயு சென்றதைப் போல நாமும் முதல் அடியை எடுக்க வேண்டும் என்று அனைவரையும் எதிர்நோக்கில் ஊக்குவித்தார்.

திருப்பலி நற்கருணை ஆசீரோடு குண மளிப்பு ஆராதனையையும் வழிநடத் தினார். அடுத்த நிகழ்வாக ஆலய வளாகத்தில் புனித யூதா ததேயுவின் சுரூபம் திருப்பவனியாகக் கொண்டு செல்லப்பட்டது. நிறைவாக, குருத்துவ அருள்பொழிவின் 25வது வருட நிறைவை சென்ற மாதம் கொண்டாடிய Msgr ஜூட், அனிச்சல் வெட்டி மீண்டும் கடவுளுக்கு நன்றி கூறினார். இறுதியாக அனைவருக்கும் மதிய உணவு வழங்கப் பட்டது.

> **கடவுள் எப்போதும் ஏழைகளின் அழுகுரலைக் கேட்கின்றார். எந்த ஓர் அழுகுரலும் துன்பத்தின் குரலும் அவர் முன்னால் கேட்கப்படாமல் இருந்ததில்லை.**
>
> **திருத்தந்தை பிரான்சிஸ்**

# ஏழைகளுக்கான நற்செய்தி துணிவுள்ள சான்றாக இருக்க வேண்டும் - திருத்தந்தை

**வத்திக்கான்:** அக்டோபர் 25 வெள்ளிக் கிழமை மாலை உரோமை புனித இலாத்தரன் பெருங்கோவிலில் உரோமை மறைமாவட்ட அருள்பணியாளர்களைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏழைகளுக்கு நற்செய்தியை கொண்டு செல்லுதல், சிதைந்ததை சீர்படுத்துதல், எதிர்நோக்கை விதைத்தல் என்னும் மூன்று தலைப்புகளில் கீழ் தனது கருத்துக்களை அவர்களுக்கு எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

முதலில், ஏழைகளுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும். ஏழைகள் எப்போதும் நம்முடன் இருக்கின்றார்கள், பணக்காரர்கள் நோய்வாய்ப்பட்டால் அவர் களது தேவைகள் அனைத்தும் முழுமை யாக பூர்த்தி செய்யப்படும் இவ்வுலகில், ஏழைகள் நோய்வாய்ப்பட்டால் அவர்கள் மாண்புடன் நடத்தப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகைய முரண்பாடுகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளால் நாம் வாழ்கின்ற இந்த உலகம் சிதைந்துள்ளது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைத் துள்ளார்.

சமூகப் பிரச்சினைகளின் பன்முகத்தன்மை யானது நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லும் அளவிற்கு நம்மை



ஏழைகள் கிறிஸ்துவின் உடலாகவும் திருவருளடையாளமாகவும் அவரை நம் கண்களுக்குப் புலப்படுகிறார்கள் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், தெருவோர எளியோர்க்கு பணம் கொடுத்து உதவும்போது அவர்களின் கண்களைப் பார்த்து உதவ வேண்டும், மாறாக பணத்தை தூக்கி எறிந்து நடப்பது என்பது அவர்களில் வாழும் கடவுளை உதாசீனப்படுத்துவது என்றும் கூறினார்.

பெரும் சமூகக் கட்டமைப்பு, சமத்துவ மின்மை காரணமாக, அன்றாடம் உணவுப் பொருள்கள் வீணாகின்றன பல ஆடம்பர உணாவு விடுதிகளில் எண்ணற்ற உணவுப்பொருள்கள் கொட்டப்படு கின்றன என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், உண்ண உணவின்றி ஆயிரக்கணக்கான ஏழைகள் நடை பாதைகளில் உறங்குவதை நாம் காண்கின்றோம் என்றும் எடுத்துரைத்தார்.

கொண்டு செல்லலாம். ஆனால் கிறிஸ்தவ நம்பிக்கை என்பது எப்போதும் செயல்பாட்டில் இருப்பது. ஏனென்றால் வரலாற்றை வழிநடத்துவது இறைவன் தான் என்ற உறுதியால் அது உயிரூட்டப்படுகிறது, மனிதனால் சாத்தியமற்றது என்று தோன்றுவதை அவரில் உருவாக்குகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது! எதிர்நோக்கின் பாதையில் செல்வோம் என்றும், ஒரு நல்ல விதையை விதைக்க வேண்டியதன் அவசியத்திற்கு பதிலளிக்கும் பணியில் ஈடுபடும் பல மக்கள், அந்த சிறிய விதையானது பெரிய மரமாக மாறும் வரை வேறு யாராவது பார்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் செயல்முறைகளை செயல் படுத்துவதைப் பின்பற்றுகின்றார்கள் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# உள்ளத்தைக் கொடு, உள்ளதைக் கொடு!

இன்று நாம் ஆண்டின் பொதுக்காலத்தின் 32ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். முதல் வாசகத்திலே, எலியா ஒரு கைம்பெண்ணிடம் உணவு கேட்க அவளோ தனது வறுமையை எடுத்துரைக் கிறாள். எலியாவோ அவரதுச் சொற்படிச் செய்யச் சொல்லி தமக்கு உணவை தயார் செய்து வரும்படிச் சொல்ல அக்கைம்பெண்ணும் தயாரித்துக் கொடுக் கிறாள். ஆண்டவர் எலியாவுக்கு கொடுத்த வாக்கின்படி கைம்பெண்ணின் பானையிலிருந்து மாவும் கலயத்திலிருந்த எண்ணெயும் தீரவில்லை.

நற்செய்தியிலோ, ஏழைக் கைம்பெண் தியாகச் சின்னமாக கருதப்படுகிறாள். ஒரு பெண்ணின் வாழ்வுநிலை குடும்ப சார்பு கொண்டது. அது கணவருக்கும் குழந்தைகளுக்கும் செய்யும் தியாகத்தில் அடங்கியுள்ளது. ஒரு கைம்பெண் தம் கணவரின் இறப்பிற்குப் பின் மேலும் சில தியாகங்களை மேற்கொள்ள வேண்டி யுள்ளது. எருசலேம் ஆலயம் வந்த செல்வர்கள் தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட சலசலவென சப்தம் எழுப் பிய வண்ணம் பணத்தைக் கொட்டி மக்களின் கவனத்தை ஈர்த்தனர். மாறாக அந்த கைம்பெண்ணோ, வறுமையிலும் தம்மை வெறுமைப்படுத்திக்கொண்டு, செலுத்தியக் காணிக்கை இயேசுவின் பார்வையை ஈர்த்தது. கடவுள் தூய கரங்களையே பார்க்கிறார். நிறைந்த பணப்பையை அல்ல.

இறைவனுக்கு நாம் தரும் காணிக்கை நம்மையே தருவதின் அடையாளம் என உணர வேண்டும். எத்தகைய மனப்பான் மையோடு நாம் காணிக்கை செலுத்துகி றோம் என்பதே முக்கியம் எவ்வளவு என்பதல்ல.

ஆம், தம் வாழ்வாதாரத்திற்கு வைத்திருந்த அனைத்தையும் அவள் காணிக்கை பெட்டி யினுள் போட்டுவிட்டாள். ஆண்டவர் மீது முழு நம்பிக்கை வைப்போருக்கு மட்டுமே இத்தகைய பண்பு நிறைவாக இருக்கும். இறைவன் நம்மை கைவிட மாட்டார் என்ற உறுதியான நம்பிக்கை இருந்தால் மட்டுமே இத்தகைய தாராள குணம் இருக்கும். இதுதான் கிறிஸ்தவ வாழ்வில் மேன்மையான நிலை. ஏழையின் உள்ளத்தோர் பேற்பெற்றோர் என்கிறார் ஆண்டவர்.

இரண்டாம் வாசகத்தில், பாவங்களைப் போக்கும் பொருட்டு ஒரே முறை இயேசு தம்மைத்தாமே பலியாகக் கொடுத்தார் என்று வாசித்தோம். இயேசு தம்மையே முழுமையாகக் காணிக்கையாக்கினார். ஆகவே, காணிக்கை என்பது கணக்குப் பார்த்தோ, காரணத்தோடோ அளிப்ப தல்ல.

தம்மிடம் மிகுதியாக உள்ளவற்றை அல்ல; தம்மிடம் உள்ளவற்றை எல்லாம் இறைவனுக்கு கையளித்த ஏழைக் கைம் பெண்ணின் உள்ளத்தையும் அவளிடம் உள்ளதையுமே இறைவன் பெரிதாகக் கருதினார். முதல் வாசகத்தில் கண்ட கைம்பெண் 'அந்த ஆண்டவர் பார்த்துக்கொள்வார்' என்று நம்பினார். கல்வாரியில் இயேசு வெறுங்கையராய் தன்னை பலியாக்கினார். பிறருக்காக நம்மை நாமே பலியாக்குவதே உயர்ந்த பலி.

-ஆ.வி. டேவிட், குளுவாங்

**பொதுக்காலம்-32-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | 1அர17: 10-16 |
| திரு.பாடல் | 146: 7. 8-9ய. 9bஉ-10 2- |
| ம் வாசகம் | எபி. 9: 24-28 |
| நற்செய்தி | மாற்கு 12: 38-44 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**